## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## மூன்றாம் பத்து

### எட்டாம் திருமொழி - நந்தா விளக்கே
### திருநாங்கூர்த் திருப்பதி 11
### 1. திருமணிமாடக்கோயில்

** நந்தா விளக்கே! அளத்தற்கு அரியாய்! *
நர நாரணனே! கருமாமுகில் போல்
எந்தாய்! * எமக்கே அருளாய் என நின்று *
இமையோர் பரவும் இடம் ** எத்திசையும்
கந்தாரம் அந்தேன் இசை பாட மாடே *
களி வண்டு மிழற்ற நிழல் துதைந்து *
மந்தார நின்று மணமல்கு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1

முதலைத் தனி மா முரண் தீர அன்று *
முது நீர்த் தடத்துச் செங்கண் வேழம் உய்ய *
விதலைத்தலைச் சென்று அதற்கே உதவி *
வினை தீர்த்த அம்மான் இடம் ** விண் அணவும்
பதலைக் கபோதத்தொளி மாட நெற்றிப் *
பவளக் கொழுங்கால பைங்கால் புறவம் *
மதலைத்தலை மென்பெடை கூடு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 2

கொலைப் புண் தலைக் குன்றம் ஒன்று உய்ய * அன்று
கொடு மாமுதலைக்கு இடர் செய்து * கொங்கார்
இலைப் புண்டரீகத்தவள் இன்பம் அன்போடு *
அணைந்திட்ட அம்மான் இடம் ** ஆளரியால்
அலைப்புண்ட யானை மருப்பும் அகிலும் *
அணிமுத்தும் வெண்சாமரையோடு * பொன்னி
மலைப் பண்டம் அண்டத் திரை உந்து நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 3

சிறையார் உவணப் புள் ஒன்று ஏறி * அன்று
திசை நான்கும் நான்கும் இரிய * செருவில்
கறையார் நெடுவேல் அரக்கர் மடியக் *
கடல் சூழ் இலங்கை கடந்தான் இடம் தான் **
முறையால் வளர்க்கின்ற முத்தீயர் நால்வேதர் *
ஐவேள்வி ஆறங்கர் ஏழின் இசையோர் *
மறையோர் வணங்கப் புகழ் எய்து நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 4

இழை ஆடு கொங்கைத்தலை நஞ்சம் உண்டிட்டு *
இளங்கன்று கொண்டு விளங்காய் எறிந்து *
தழை வாட வன்தாள் குருந்தம் ஒசித்துத் *
தடந்தாமரைப் பொய்கை புக்கான் இடம் தான் **
குழை ஆட வல்லிக் குலம் ஆட மாடே *
குயில் கூவ நீடு கொடி மாடம் மல்கு *
மழை ஆடு சோலை மயில் ஆலு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 5

பண்ணேர் மொழி ஆய்ச்சியர் அஞ்ச * வஞ்சப்
பகுவாய்க் கழுதுக்கு இரங்காது * அவள் தன்
உண்ணா முலை மற்றவள் ஆவியோடும் *
உடனே சுவைத்தான் இடம் ** ஓங்கு பைந்தாள்
கண்ணார் கரும்பின் கழை தின்று வைகிக் *
கழுநீரில் மூழ்கிச் செழுநீர்த் தடத்து *
மண் ஏந்து இள மேதிகள் வைகு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 6

தளைக் கட்டவிழ் தாமரை வைகு பொய்கைத் *
தடம் புக்கடங்கா விடங்கால் அரவம் *
இளைக்கத் திளைத்திட்டு அதன் உச்சி தன் மேல் *
அடி வைத்த அம்மான் இடம் ** மாமதியம்
திளைக்கும் கொடி மாளிகை சூழ் * தெருவில்
செழுமுத்து வெண்ணெற்கெனச் சென்று * மூன்றில்
வளைக்கை நுளைப் பாவையர் மாறு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 7

துளையார் கருமென்குழல் ஆய்ச்சியர் தம் *
துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் * முற்றா
இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம் *
விளைவித்த அம்மான் இடம் ** வேல் நெடுங்கண்
முளை வாள் எயிற்று மடவார் பயிற்று *
மொழி கேட்டிருந்து முதிராத இன்சொல் *
வளை வாய கிள்ளை மறை பாடு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 8

விடை ஓட வென்று ஆய்ச்சி மென்தோள் நயந்த *
விகிர்தா! விளங்கு சுடர் ஆழி என்னும் *
படையோடு சங்கு ஒன்றுடையாய்! என நின்று *
இமையோர் பரவும் இடம் ** பைந்தடத்துப்
பெடையோடு செங்கால அன்னம் துகைப்பத் *
தொகைப் புண்டரீகத்திடைச் செங்கழுநீர் *
மடை ஓட நின்று மது விம்மு நாங்கூர் *
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 9

** வண்டார் பொழில் சூழ்ந்து அழகாய நாங்கூர் *
மணிமாடக் கோயில் நெடுமாலுக்கு * என்றும்
தொண்டாய தொல் சீர் வயல் மங்கையர் கோன் *
கலியன் ஒலி செய் தமிழ் மாலை வல்லார் **
கண்டார் வணங்கக் களி யானை மீதே *
கடல் சூழ் உலகுக்கு ஒரு காவலராய் *
விண் தோய் நெடு வெண்குடை நீழலின் கீழ் *
விரி நீர் உலகாண்டு விரும்புவரே 10

**அடிவரவு:** நந்தா முதலை கொலை சிறை இழை பண் தளை துளை விடை வண்டார் சலம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---